## சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனி – 2016

சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் (“கம்பனி”) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்த கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் துறையிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்றின் மூலம் நான் உதவியைப் பெற்றிருந்தேன். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளினை தொடர்புடைய முன்னைய ஆண்டிற்கான ரூபா 2,581,162 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 151,600 வரிக்கு முன்னரான தேறிய நட்டமொன்றை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,429,562 முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டில் ரூபா 10,662,208 இனால் வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 கம்பனியின் இலாபத்தன்மை

இலங்கை வங்கியினால் உரிமையைக்கொண்டுள்ள ஆதனங்களின் முகாமைத்துவ முகவரொருவராக செய்யப்படுவது கம்பனியின் பிரதான வியாபார செயற்பாடாகக் காணப்பட்டது. அதற்கமைய, கம்பனி நான்கு உணவகங்கள், ஏழு விடுமுறை வீடுகள் மற்றும் இருபத்தி மூன்று உத்தியோகத்தர் விடுதிகளினை முகாமைசெய்கின்றது.

மீளாய்வாண்டின்போது கம்பனியின் இலாபத்தன்மையின் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கம்பனிக்கு வரிக்கு பின்னரான தேறிய இலாபமொன்று ஏற்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டிலிருந்து வரிக்கு பின்னரான தேறிய நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன்

ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வரிக்கு பின்னரான தேறிய நட்டம் 84 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது.

(ஆ) அறை ஒதுக்கீட்டு வருமானம் (room reservation income) குறைவடைந்தமை காரணமாக முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 0.3 மில்லியன் தொடர்புடைய நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 2.2 மில்லியன் குறிப்பிடத்தக்க நட்டமொன்றை கதிர்காம சீபாங் உணவகம் காட்டுகின்றது. எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின்போது, அது ரூபா 1.6 மில்லியன் தொடக்கம் ரூபா 1.2 மில்லியன் வரையான வீச்சில் இலாபமொன்றைக் காட்டுகின்றது.

(இ) கிலன்கெய்ன் பங்கிளா (Glencain Bunglow), டிக்கோயா 2013 ஆம் ஆண்டிலிருந்து நட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றதுடன் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது மீளாய்வாண்டில் ரூபா 0.7 மில்லியன் வரை அல்லது 481 சதவீதத்தினால் நட்டம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

(ஈ) சீபாங் விடுமுறை வீடுகள், நுவரெலியா மற்றும் ஹபுதல என்பவற்றை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டில் முறையே 48 சதவீத மற்றும் 43 சதவீத தேறிய இலாப விகிதமொன்றை காட்டுகின்றது.

(ஊ) மீளாய்வாண்டில் இலங்கை வங்கி தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட நிறைவேற்றுதர தேயிலை சேவைகளிலிருந்து ரூபா 168,309 நட்டமொன்று கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது.

### 3.2.2 கம்பனியின் நிதி நிலைமை

பீஓசி மெனஜ்மெட் அன்ட் சப்போர்ட் சேர்விசஸ் (பிறைவேட்) விமிட்டட், பிஓசி புரபர்ட்டி டெவலப்மென்ட் அன்ட் மென்ஜ்மெட் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் பீஓசி டிரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்பன கம்பனியின் முதன்மை பங்குதாரர்களாகக் காணப்பட்டதுடன் இந்த பங்குதாரர்கள் இலங்கை வங்கியின் முழுமையான உரிமையைக் கொண்டுள்ள துணைக்கம்பனிகளாகக் காணப்படுகின்றன. ஆகையினால், இலங்கை வங்கி கம்பனியின் இறுதி தாய்க் கம்பனியாகக் காணப்படுகின்றது. முன்னைய நான்கு ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி நிலைமை பின்வருமாறு.

ரூபா.000

| விபரம் | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 3,999 | 3,585 | 3,476 | 3,805 | 3,333 |
| நிதிச் சொத்துக்கள் | 13,263 | 12,062 | 11,322 | 10,292 | 9,183 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 11,289 | 12,957 | 10,579 | 12,654 | 10,160 |
| பங்கு மூலதனமும் ஒதுக்கமும் | 641 | 1,106 | 4,031 | 4,062 | 3,840 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 12,217 | 11,255 | 7,641 | 7,076 | 6,109 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 15,693 | 16,243 | 13,705 | 15,613 | 12,727 |

i. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின்போது கம்பனியின் ஒதுக்கங்கள் 83 சதவீதத்தினால் பற்றாக்குறைவடைந்து காணப்பட்டது.

ii. கம்பனியின் தேறிய நடைமுறைச் சொத்துக்களின் மறைப் பெறுமதி 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்துக் காணப்பட்டமையால் கம்பனியின் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் திருப்திகரமான மட்டமொன்றில் காணப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

### 3.2.3 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதான தகவல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சில முக்கிய விகிதங்கள் பின்வருமாறு.

| **விகிதம்** | **2016** | **2015** |
|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள் (சதவீதம்)** | **%** | **%** |
| தேறிய இலாப விகிதம் | (0.32) | (2.19) |
| மொத்தச் சொத்துக்கள் மீதான திரும்பல் | (1.63) | (10.23) |
| உரிமை மீதான திரும்பல் | (72.53) | (264.49) |
| **திரவத்தன்மை விகிதங்கள் (தடவைகளின் எண்ணிக்கை)** | | |
| நடைமுறை விகிதம் | 0.75 | 0.79 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலாபத்தன்மை விகிதங்களின் எதிர்மறைப் பெறுமதிகளினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது நேர்மறையான போக்கொன்றைக் காட்டுகின்றது.

(ஆ) 01 இற்குக் குறைவாகக் காணப்படும் நடைமுறை விகிதத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது 5 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல் மீளாய்வு

முகாமைத்துவ கட்டணமொன்றிற்காக, இலங்கை வங்கியினால் உரிமையைக்கொண்டுள்ள ஆதனங்களின் முகாமைத்துவ முகவரொருவராக கம்பனி செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. எவ்வாறாயினும், இது கம்பனியின் நோக்கமொன்றாக அமைப்பு அகவிதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முகாமைத்தவ செயற்பாடுகள்

செலவிடப்படாத மீதியினை ஊழியர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கான முறையான கொள்கையொன்று இன்றி உடைந்த வகைகளின் மாற்று செலவினை அறவிடுவதற்காக கம்பனியில் மாதாந்த சேவைக் கட்டணத்தின் பத்து சதவீதம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,051,738 திரண்டிருந்தது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின்படி கம்பனியால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் தொடர்ச்சியான அடிப்படையில் சந்தித்தல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களினை கம்பனி நடாத்தியிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலுள்ள குறைபாடுகள் கம்பனியின் தலைவருக்கு விநியோகிக்கப்பட்ட எனது விபரமான அறிக்கைகளினால் கம்பனியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **அவதானிப்பு** |
|---|---|
| (அ) கணக்கீடு | - கம்பனி முறையான நாளேட்டுப் பதிவு செயன்முறையொன்றைக் கொண்டிருக்காததுடன் பேரேட்டில் பதியப்பட்ட நாளேட்டுப் பதிவுகளுக்கு நாளேட்டு உறுதிச்சீட்டுக்களினை பேணியிருக்கவில்லை. |
| | - ஒதுக்கீட்டு வருமானம் வருமானத்தினை உருவாக்கும் சரியான புள்ளியில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. |
| | - கணக்குகள் திணைக்களம் உணவகங்களின் மாதாந்த பொழிப்பு மற்றும் பொதுப் பேரேடுகளுக்கிடையே மாதாந்த இணக்கத்தினை மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | - நிலையான சொத்துக்கள் வகை அடையாளம் காணும் நோக்கத்திற்காக பெயரிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இருப்புக்கள் முகாமைத்துவம் | - சரக்கிருப்புக்களுக்கு கணக்கீட்டு முறைமை பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) கடன்பட்டோர் முகாமைத்துவம் | - நீண்டகால நிலுவையாகவுள்ள பெறவேண்டிய கணக்குகளுக்கு ஏதிராக ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டினை தீர்மானிப்பதற்காக எவ்வித முறையான எழுத்துமூல முகாமைத்துவக் கொள்கையும் காணப்படவில்லை. |